அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 359

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
16 டிசம்பர், 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

சுற்றறிக்கைகளினதும் சுற்று நிருபங்களினதும் பட்டியல்

சுற்றறிக்கைகள் சுற்று நிருபங்கள் அட்டவணைகள் என்பவற்றைப் பேணுதற் பொருட்டு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுக. அத்துடன் அமைச்சின் கீழ்வரும் அரச கூட்டுத்தாபனம்/நியதிச்சட்டசபை இந்த நடவடிக்கையை மேற்கொள்க.

(அ) எல்லா அமைச்சுக்களும் பிரதேச, மாவட்ட பகுதி அலுவலகங்கள் உட்பட திணைக்களங்களும் தத்தமது சுற்றறிக்கைகளுடன்/சுற்றுநிருபங்களுடன் திறைச்சேரிச் சுற்றறிக்கைகளையும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளையும் கொண்ட நாளது வரையிலான கோப்பு ஒன்றினைப் பேணி வருதல் வேண்டும்.

(ஆ) இத்தகைய சுற்றறிக்கைகளையும் சுற்று நிருபங்களையும் வெளியிடும் அமைச்சு அல்லது திணைக்களம் அலுவலக சுற்றறிக்கைகளும் சுற்று நிருபங்களும் பற்றிய வகையில் வருடம் இரு தடவை அதாவது ஜனவரி 1-ஆம் திகதியும் ஜூலை 1ஆம் திகதியுமாக வருடந்தோறும் முந்திய ஆறு மாத காலத்தை உள்ளடக்கும் வகையில் எண் முறையில் அமைந்த பட்டியல் ஒன்றினையும் எழுத்து வரிசையிலமைந்த பட்டியல் ஒன்றினையு[ம்] தயாரித்தல் வேண்டும். இந்தப் பட்டியலைத் தயாரிப்பதெனில் வழக்கிழந்தவற்றை அகற்றுதலையும் ஏனையவற்றை இலகுவாக்கி ஒன்றுக இணைத்து நாளது வரையிலாக்குதலையும் கருத்திற் கொண்டு வழக்கிலுள்ள சுற்றறிக்கைகளையும் சுற்று நிருபங்களையும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு அமைச்சும் இந்தப் பட்டியலின் இரண்டு பிரதிகளைப் பொதுத் திறைச்சேரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஈ) இந்தக் காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்டதும் அவர்களது பணிகள் தொடர்பானதுமான பிரதான சட்டவாக்கங்களினதும் துணைச் சட்டவாக்கங்களினதும் அட்டவணை ஒன்றினையும் இந்தப் பட்டியலுடன் இணைத்தல் வேண்டும்.

02. 31-டிசம்பர் 1986ஆம் திகதி வரை வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், சுற்று நிருபங்கள் அனைத்தையும் பற்றிய வகையில் இந்தத் திகதி வரை சட்டமாக்கப்பட்டதும் இதனுடன் தொடர்புடையதுமான பிரதான சட்டவாக்கங்களினதும் துணைச் சட்டவாக்கங்களினதும் அட்டவணை உட்பட பட்டியல் ஒன்றினை (எண் முறையிலும், எழுத்து வரிசையிலும்) 1987-ஆம் ஆண்டு ஜனவரி இறுதிக்கு முன் வெளியிடுவதற்கு தயைகூர்ந்து நடவடிக்கை எடுக்கவும்.

03. இந்தச் சுற்றறிக்கை திறைச்சேரி பிரதிச் செயலாளரின் சம்மதத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: டி. பி. ஜ. ப். எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.